பெயர்: ........................ தேதி: ........................

# அடைப்புக்குறிக்குள் உள்ள வார்த்தையை சரியான வேற்றுமை உருபுடன் இணைத்து எழுது.

**சான்று:-** காற்றை நம் (கண்கள்) _______ பார்க்க முடியாது.

காற்றை நம் **கண்களால்** பார்க்க முடியாது.

1. காகம் (உணவு) _______ ப் பகிர்ந்து உண்ணும்.

2. உடற்பயிற்சிகள் உடல் ஆரோக்கியமாக (இருப்பது) _______ உதவுகின்றன.

3. (குழந்தை) _______ இன்பச்சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றனர்.

4. கேள்வி கேட்கும் தன் (கன்று) _______ ப் பார்த்துத் தாய் மரம் மகிழ்ந்தது.

5. (வகுப்பறை) _______ பொம்மலாட்டம் தொடங்கியது.

6. (மரங்கள்) _______ வெட்டி அழிப்பதால் மழை வளம் குறையும்.

7. (களிமண்) _______ செய்த பொருள்களுக்கு வண்ணமிடு.

8. சூரிய (ஒளி) _______ விண்மீன்கள் பகலில் நம் கண்களுக்குத் தெரிவதில்லை.

9. (படங்கள்) _______ ச் சேகரித்து படத்தொகுப்பு உருவாக்கு.

10. (சுவேதா) _______ பாட்டி கதை கூறுவார்.

11. மீனவர்கள் கடலில் (மீன்கள்) _______ ப் பிடித்தனர்.

12. மருத்துவர் (என்) _______ சோதித்துப் பார்த்தார்.